
# மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான்

1



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

**ஜனங்கள் சாப்பிடும்படி ஏராளமானதை உடையவர்களாயிருந்து, புசிக்க ஏராளம் இருப்பினும், பிறகு மரித்து, இழக்கப்பட்டு வேதனைப்படுவது (torment) ஜனங்களுக்கு ஒரு பெரும் தவறாயிருந்ததை அவன் அறிந்திருந்தான், அவர்களுக்கு சாப்பிட ஒன்றுமே இல்லாமல், மரித்து, பரலோகத்திற்கு போவதே சிறந்தது என்பதை அவன் அறிந்திருந்தான்.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## யாக்கோபு 5:17-18

17. எலியா என்பவன் நம்மைப்போலப்
பாடுள்ள மனுஷனாயிருந்தும்,
மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய்
ஜெபம்பண்ணினான். அப்பொழுது
மூன்றுவருஷமும் ஆறுமாதமும்
பூமியின்மேல் மழை பெய்யவில்லை.
18. மறுபடியும் ஜெபம்பண்ணினான்,
அப்பொழுது வானம் மழையைப்
பொழிந்தது, பூமி தன் பலனைத்
தந்தது.



**இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசி யாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:**

---

## செய்தி: 53-10-18 எலியா

---

17. அந்நாட்களில் அது எப்படி யிருந்தது, நாம் சரித்திரத்தைத் திரும்பிப் பார்க்கையில், 1 இராஜாக்கள் 9-ம் அதிகா ரத்தில், அந்நாளில் என்ன சம்பவித்திருந் தது என்பதைக் குறித்து சிந்திக்கத் துவங்கு கையில், இஸ்ரவேலர்...

மழை பெய்யாமல் ஜனங்கள் பட்டினி கிடந்து சாகும்படி தேவன் மழைகளை நிறுத்த வேண்டுமென்று ஒரு - ஒரு தீர்க்கதரிசி ஜெபிப்பதற்கு காரணம் என்ன வென்றால், உங்களால் அதைக் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா?

இப்பொழுது, ஒரு பரிசுத்தவான், ஒரு தெய்வ பக்தியுள்ள மனிதன், ஒரு தீர்க்க தரிசி, பெரிய தீர்க்கதரிசி, வேதாகமத்தி லேயே பெரிய தீர்க்கதரிசிகளில் ஒருவன், பூமியின் மேல் ஆகாரத்தை விளைவிக்கும் படி மழையும் கூட பெய்ய தேவன் அனுமதிக்கக் கூடாது என்று ஜெபம் பண்ணினான்.

**ஜனங்கள் சாப்பிடும்படி ஏராளமானதை உடையவர்களாயிருந்து, புசிக்க ஏராளம் இருப்பினும், பிறகு மரித்து, இழக்கப்பட்டு வேதனைப்படுவது (torment) ஜனங்களுக்கு ஒரு பெரும் தவறாயிருந்ததை அவன் அறிந்திருந்தான், அவர்களுக்கு சாப்பிட ஒன்றுமே இல்லாமல், மரித்து, பரலோகத் திற்கு போவதே சிறந்தது என்பதை அவன் அறிந்திருந்தான்.** அது சரியே. இன்றைக் கும் அதுவே உண்மையாக இருக்கிறது.

18. அமெரிக்க மக்களாகிய நம்மோ டுள்ள காரியம் என்ன, நாம் நன்றாக சாப்பிட்டு கொழுத்திருக்கிறோம், மற்றும்

எல்லாமுமாய் இருக்கிறோம், நாம் எல்லா வற்றையும் பெற்றிருப்பதாக எண்ணிக் கொள்கிறோம் made. அது இஸ்ரவேலர் பெற்றிருந்த அதேவிதமாகவே இருக்கிறது. ஆகாப் இராஜாவின் அரசாட்சியில், தேசம் செழிப்பாக இருந்த ஒரு நிலைக்கு வந்தது. அவர்களிடம் அனேக இரதங்களும் குதிரைகளும் இருந்தன. அவர்கள் எங்கிலு முள்ள சகல தேசங்களையும் தோற்கடித் திருந்தார்கள். ஆனால் தேசத்தின் முக்கிய மனிதனாகிய, அந்த இராஜா, தேசத்தி னுடைய இராஜா போய், ஒரு சிறு எகிப்திய இராஜகுமாரத்தியை (Egyptian princess) விவாகம் பண்ணினான், அது எகிப்திய இராஜகுமாரத்தி தான் என்று நம்புகிறேன். அவள் ஒரு விசுவாசி அல்லாத ஒரு - ஒரு பெண்ணாக இருந் தாள், அதுதான் பிரச்சனையை ஆரம்பித் தது. புளிப்புள்ள கொஞ்ச மாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப் பண்ணும்.

19. நீங்கள் காண்கிறபடி, இன்று ஜனங்கள்... நீங்கள், "நல்லது, சகோதரன் பிரன்ஹாமே, நான் மிகவும் நல்ல ஒரு கிறிஸ்தவன் என்று நான்-நான் நினைக்கி றேன்" என்று கூறுகிறீர்கள். நீங்கள் மிகவும் நல்ல ஒரு கிறிஸ்தவனாக இருக்க முடியாது. அங்கே அப்படிப்பட்ட ஒரு காரியமே கிடையாது. நீங்கள் ஒன்றில் ஒரு கிறிஸ்தவனாக இருக்க வேண்டும், அல்லது நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக இல்லாமல் இருக்கிறீர்கள். ஒரு கோதுமை விதையோ அல்லது உப்பு... கோதுமை யானது இன்று ஒரு வாற்கோதுமையாகவும் நாளை ஒரு -ஒரு - ஒரு கோதுமையாகவும் இருக்க முடியாது. அது இன்று ஒரு கோதுமையாக இருக்கிறது, அது எப்போ துமே கோதுமையாகவே இருக்கிறது. ஒரு கிறிஸ்தவனாக ஆகிற ஒரு மனிதன் இன்று ஒரு கிறிஸ்தவனாகவும் நாளை ஒரு பாவியாகவும், மற்றும் இன்று ஒரு கிறிஸ்தவனாகவும் நாளை ஒரு பாவி

யாகவும் இருப்பதில்லை. கிறிஸ்து நேற்றும், இன்றும் என்றும் மாறாமல் இருப்பது போன்று அவனும் மாறாமல் இருக்கிறான், ஏனென்றால் அவன் தேவ னுடைய ஒரு குமாரனாக ஆகிறான்.

20. மேலும் ஒரு தேசம், நாம் கிறிஸ்தவ தேசமாக அழைக்கப்படுகிறோம். நல்லது, நாம் அவ்வாறு அழைக்கப்படுவதன் காரணம் என்னவென்றால், நாம் அப்பெய ரைப் பற்றிப் பிடித்திருக்கிறோம். ஆனால் அந்தப் பெயர் இருப்பதால், அது நம்மை தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் எல்லா வற்றிலுமிருந்தும் விடுவிக்காது. எனவே இங்கே... கொஞ்ச காலத்திற்கு முன்பு, நாங்கள் இந்தப் பொருளின் பேரில் பேசிக் கொண்டிருந்தோம், நீங்கள் கவனிப்பீர்க ளானால், ஒவ்வொரு வருடமும், தேசம் முழுவதும், வறட்சியானது கொஞ்சம் கொஞ்சமாக மோசமாகத் தொடங்கியிருக் கிறது, ஒவ்வொரு வருடமும், ஒவ்வொரு வருடமும் அதிகரித்துக்கொண்டேயிருக்

கிறது. இன்னும் நாம் அதில் பாதியளவும் கண்டிருக்கவில்லை என்று நம்புகிறேன். அது மட்டுமல்ல, ஆனால் அதைக் குறித்த காரியம் என்னவென்றால், நம்முடைய ஜனங்கள் தேவனை மறந்துகொண்டே இருக்கிறார்கள். அதுதான் முக்கிய காரியம், நண்பர்களே. நமக்கு புசிக்க ஏராளம் உண்டு. நமக்கு அருமையான மோட்டார் வாகனங்கள் உள்ளன. நாம் உலகத்திலேயே மிக செழிப்பான தேசமாக இருக்கிறோம். இவை எல்லாவற்றின் மத்தியிலும், அது எங்கிருந்து வருகிறது என்பதை நாம் கவனித்துப் பார்ப்பதில்லை.

21. அது ஒரு ஆப்பிள் மரத்தின் கீழிருக்கும் ஒரு பன்றியைப் போன்று இருக்கிறது. அது நாள் முபவதும் ஆப்பிள் பழங்களைத் தின்னும். அவைகள் அதனுடைய தலையின் மேல் வந்து விழுந்தாலும், அது ஒருபோதும் மேலே நோக்கிப் பார்த்து, அவைகள் எந்த வழியில் வந்து கொண்டிருக்கின்றன என்று

காணாது. நல்லது, நாம் இருக்கும் விதமாகவே அதுவும் இருக்கிறது. நாம் அப்படியே முற்றிலுமாக... தேவன் நம்மேல் தமது ஆசீர்வாதங்களைப் பொழி யும் போது, நாமோ ஒருபோதும், உமக்கு நன்றி, கர்த்தாவே, நான் இங்கே இருப் பதற்காக மிகவும் மகிழ்ச்சியாயிருக்கிறேன், புசிக்க எனக்கு ஏதாவது கொடுப்பதற்காக நான் நன்றியுள்ளவனாயிருக்கிறேன்" என்று கூறும்படியாக மேலே நோக்கிப் பார்ப்ப தில்லை. அவர் நமக்குக் கடன்பட்டிருப்பது போன்று நாம் அப்படியே தொடர்ந்து போய் விடுகிறோம். நாம் தான் அவருக் குக் கடன்பட்டிருக்கிறோம். அவர் நமக்கு எதுவும் கடன்படுவதில்லை. நமக்கு இருக் கிற எல்லாவற்றோடும் நாம் அவருக்குக் கடன்பட்டிருக்கிறோம்.

22. இப்பொழுது, நான் ஒரு....யிடம் பேசிக் கொண்டிந்தேன். அண்மையில் சில ஊழியக்காரர்களும் நானும் நியாயத்தீர்ப்பு இந்த தேசத்தை தாக்கப் போவதைக்

குறித்து இவ்விதமாகப் பேசிக் கொண்டிருந்தோம். அவர்கள், "சகோதரன் பிரன்ஹாமே, இந்த தேசத்தின் புனிதத்தன்மையின் நிமித்தமாகவும்... மிகவும் தீரமான கிறிஸ்தவர்களாகிய நம்முடைய முற்பிதாக்களின் நிமித்தமாகவும் தேவனால் இந்த தேசத்தின் மேல் தண்டனையை வைக்க முடியாது... மேலும் பிளிமத் பாறையிலும் மற்றவைகளிலும். அவர் அதை நினைவில் வைத்திருப்பார்" என்றார்கள்.

23. நான், "தேவன் இஸ்ரவேலிடத்தில் அன்புகூர்ந்தார், வேதாகமத்தில் அவ்வாறு கூறப்பட்டுள்ளது; அவர் அந்த விதமாக நம்மை நேசித்ததாக அவர் ஒருபோதும் சொல்லவில்லை" என்றேன். அப்போது நான், "ஆனால் அவர் உடையவராய் இருந்தார்.... அவருடைய முதலாவது அன்பு இஸ்ரவேலாகவே இருந்தது" என்றேன். இருப்பினும் இஸ்ரவேல் தேவனுடைய சித்தத்தை விட்டு வெளியே போன போது, பரலோகத்தின் நியாயத்

தீர்ப்புகளை இஸ்ரவேல் மேல் ஊற்றி னாரே. தேவனுடைய நியாயத்தீர்ப்பு களுக்கு நாமும் தப்பிக்க மாட்டோம். தாவீது தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதனாய் இருந்தாலும், அவன் தேவ னுக்கு முன்பாக பாவம் செய்தபோது, தாவீது விதைத்ததை அவனே அறுக்கும்படி தேவன் செய்தார். நாம் ஒருபோதும் அதைப் பெற்றுக்கொள்ளாமல் போவ தில்லை. ஒரு தனிப்பட்ட நபராக இருந் தாலும், சபையாக இருந்தாலும், சமுதா யமாக இருந்தாலும், அல்லது ஒரு தேசமாக இருந்தாலும், பாவத்திற்கான நியாயத்தீர்ப்பு தேவனுக்கு அவசியமா யிருக்கும். ஆமென்.

**தேவன் ஒரு செய்தியை அனுப்பி அதை ஜனங்களுக்கு உரைத்து, அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளாமல் போனால், அவர் தமது ஊழியக்காரனை அங்கிருந்து விலக்கி, தமது வாதைகளை அனுப்புகிறார்: பஞ்சம், மரணம் (ஆவிக்குரிய மரணம், சரீர மரணம் கூட).**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## 1 இராஜாக்கள் 17:1

**கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியனாகிய எலியா ஆகாபை நோக்கி: என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்.**

---

## யாக்கோபு 5:17-18

**17. எலியா என்பவன் நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான். அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை.**

**18. மறுபடியும் ஜெபம்பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது.**

**இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசி யாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:**

---

## செய்தி: 61-0319 யேசபேல் மார்க்கம்

---

எலியாவின் கடைசி செய்தியும்; அவன் தேவனுடைய சமுகத்திலிருந்து அன்று காலை புறப்பட்டு சாலையின் வழியாக நடந்து வந்த போது, அவன் தேகமெல் லாம் மயிர் வளர்ந்திருந்தது, அவனுடைய வழுக்கை தலை பிரகாசித்தது, அவனு டைய தாடி காற்றினால் அசைந்தது, அவ னுடைய கண்கள் தேவனுடைய மகிமை யால் மிளிர்ந்தன, அவன் கையில் தடியைப் பிடித்துக் கொண்டு, கால்கள் தள்ளாடாமல் நிதானமாக நடந்து வந்து கொண் டிருந்தான்.

அவன் என்ன செய்தான்? அவன் சமாரியாவிலிருந்து நேராக வெள்ளை

மாளிகைக்கு சென்று, ''கர்த்தர் உரைக்கிற தாவது'' என்றான்.

அவன் எதற்கும் பயப்படவில்லை. சபைகள் அவனைப் புறக்கணித்தன, ஜனங்கள் அவனைப் புறக்கணித்தனர், இப்பொழுது தன் கடைசி தாக்குதலை அவன் வெள்ளை மாளிகையின் மேல் செலுத்துகிறான்.

61. அதன்பிறகு என்ன நடந்தது?

கவனியுங்கள்! **அந்த தாக்குதலுக்குப் பிறகு, அவன் அமைதியாகிவிட்டான். யாரும் அவனைக் குறித்து ஒன்றுமே கேள்விப்பட வில்லை.**

**தேவன் அவனை காட்சியிலிருந்து அழைத்துக் கொண்டார்.**

**அவர், "எலியாவே, உன் செய்தியை இஸ்ரவேல் முழுவதும் அறியப்பண்ணி னாய். அவர்களுக்கு அது தெரியும். இப்பொழுது அவர்களை விட்டு விலகி**

**வனாந்தரத்துக்கு வா. உன்னை அவர்களிடமிருந்து பிரித்துக்கொள். ஏனெனில் நான் ஒன்றைச் செய்யப் போகிறேன். என் செய்தியைப் புறக்கணிப்பதனால் என்ன நேரிடும் என்று அவர்களுக்கு காண்பிக்கப் போகிறேன்" என்றார்.**

**என்ன நேர்ந்தது? யுத்தம், பஞ்சம், பசியால் வாடுதல். பரிசுத்த ஆவியானவர் உரைக்கிறதாவது. "என்ன வந்து, கொண்டிருக்கிறது என்பதை கவனியுங்கள்! என்ன தொடரப் போகிறது என்பதைக் கவனியுங்கள்! பஞ்சம் உண்டாயிருந்தது, பாஞ்சம் ஒன்று வரும்." ஓ, ஆகாரம் இல்லாத பஞ்சம் அல்ல, ஆனால் தேவனுடைய வார்த்தையையும் அவருடைய சத்தியத்தையும் கேட்கக் கூடாதபடிக்கு பஞ்சம்.** எல்லா சபைகளுமே அன்னியோன்னியமாகி அதற்குள் நுழைந்து விடும். அவர்கள் ஏற்கனவே அதனால் விழுங்கப்பட்டுள்ளனர்.

62. எலியா என்ன செய்தான்? ஜீவத் தண்ணீர் கிடைக்கக் கூடிய மலையின் மேல் மறைந்திருந்த ஒரு நீரூற்றை அவன் கண்டான்.

**அவன் அங்கு தேவனுடைய வல்லமை யின் கீழ் அமர்ந்திருந்த போது, தேவ னிடத்திலிருந்து அவனுக்கு வெளிப்பாடு கிடைத்தது.**

**மற்றவர்கள் பசியால் வாடிக் கொண் டிருந்த போது, இந்த வெளிப்பாடுகள் அவனுக்கு மறைந்திருந்த சிறு நீரூற்றாக அமைந்திருந்தது.**

தேவன் தமது ஊழியக்காரரை (காகங்களை) ஆசிர்வதிப்பாராக. அவன் ஜனங்களிடமிருந்து பிரிந்திருந்த போது, இவை அவனுக்கு உணவைக் கொண்டு தந்தன. "அவர்கள், கீழே எழுப்புதலுக்காக வாடி, அவனுடைய எழுப்புதல்களைக் குறித்து நாம் ஒன்றும் கேட்பதில்லையே...

நமது ஸ்தாபனங்களை தாக்கிக் கொண் டிருந்த அந்த கிழவன் இப்பொழுது எங்கே?'' என்று கேட்டார்கள்.

அவர்களுக்குத் தெரியவில்லை. **அவன் தனிமையான ஓரிடத்திற்கு சென்று தேவ னுடன் கூட இருந்தான். அவர்கள் அவனு டைய சத்தத்தைக் கேட்கவில்லை. அதன் பிறகு அவர்கள் காணத் தொடங்கினர்.**

63. **தேவன் ஒரு செய்தியை அனுப்பி அதை ஜனங்களுக்கு உரைத்து, அவர் கள் அதை ஏற்றுக் கொள்ளாமல் போனால், அவர் தமது ஊழியக் காரனை அங்கிருந்து விலக்கி, தமது வாதைகளை அனுப்புகிறார்: பஞ்சம், மரணம் (ஆவிக்குரிய மரணம், சரீர மரணம் கூட).**

**சகோதரனே, மனக்கிலேசம் வருவதைப் பொறுத்திருந்து பார். அப்படிப்பட்ட ஒன்றை நீ கண்டிருப்பதாக எண்ணிக் கொண்டிருக்**

கிறாய், சற்று கழிந்து என்ன நடக்கிறதென்று பார். அப்படிப்பட்ட ஒன்றை நீ கண்டிருக்க மாட்டாய்.

ஒரு நல்ல ஆவிக்குரிய எழுப்புதலுக் காக நீ ஏங்கிக் கொண்டிருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறாய். சிறிது காலம் பொறுத்திருந்து பார். சற்று காத்திரு, தேவனுடைய வார்த்தையைக் கேட்க நீ வாஞ்சித்து கதறி அழுவாய். வேதம் அவ்வாறு கூறுகின்றது. "கடைசி நாட் களில் பஞ்சம் உண்டாகும், அது ஆகாரக் குறைவினால் உண்டாகிய பஞ்சமல்ல, ஜலக்குறைவினால் உண்டாகிய தாகமு மல்ல. அது உண்மையான தேவனுடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சம்" என்று தீர்க்கதரிசி கூறியுள்ளான் (ஆமோஸ் 8:11).

அந்த சத்தம் வனாந்தரத்தில் எங்கோ ஓரிடத்தில் மறைந்து அமைதியாயிருக்கும்.

அவர் தமது ஊழியக்காரராகிய காகங்களை நியமித்தார். அந்த ஊழியக்காரப் பறவைகள் ஆசிர்வதிக்கப்படுவதாக! அவன் சபையிலிருந்து பிரிந்திருந்த நேரத்தில் அவை எலியாவின் சத்தத்தை உயிருடன் வைத்திருத்தம், இந்த காகங்கள் அவனுக்கு காலையில் இறைச்சியும், அப்பமும் கொண்டு வந்து கொடுத்தன, மாலையிலும் இறைச்சியும், அப்பமும் கொண்டு வந்து கொடுத்தன. அவன் அந்த சிறு நீரூற்றின் தண்ணீரைப் பருகினான். ஆனால், கீழேயிருந்த மற்றவர்களுக்கோ ஆவிக்குரிய ஆகாரமும், தண்ணீரும் கிடைக்காமல் போயிற்று.

**”அந்த கிழவனுக்கு மூளை குழம்பி விட்டது. பாருங்கள்? என்ன, தான் அதை வரவழைக்கும் வரை மழை பெய்யாது என்று அவன் கூறுகிறானே” என்று சில ஜனங்கள் கூறினதை என்னால் கேட்க முடிகின்றது. ஆனால் அவன் தேவனுடைய சாட்சியாக இருந்தான்.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## 1 இராஜாக்கள் 17:1

கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியனாகிய
எலியா ஆகாபை நோக்கி: என்
வாக்கின்படியே அன்றி இந்த
வருஷங்களிலே பனியும் மழையும்
பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின்
தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற
நான் அவருடைய ஜீவனைக்கொண்டு
சொல்லுகிறேன் என்றான்.

---

## யாக்கோபு 5:17-18

17. எலியா என்பவன் நம்மைப்போலப்
பாடுள்ள மனுஷனாயிருந்தும்,
மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய்
ஜெபம்பண்ணினான். அப்பொழுது
மூன்றுவருஷமும் ஆறுமாதமும்
பூமியின்மேல் மழை பெய்யவில்லை.

18. மறுபடியும் ஜெபம்பண்ணினான்,
அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது,
பூமி தன் பலனைத் தந்தது.

**இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசி யாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:**

---

## செய்தி: 53-0405E சாட்சிகள்

---

59. ஒரு சமயம் எலியா என்னும் பெயரைக் கொண்ட ஒரு ஆள் இருந்தான். தேவன் அவனோடு இருந்தார். அந்த பெரிய சோதனைகளில் தேவனை, தேவன் காரியங்களை நடப்பிப்பதை அவன் கண்டான். ஆதலால் தேசத்தின் மேல் பாவம் வருவதைக் கண்டான், ஆகவே அவன் ''இப்பொழுது ஒரு நிமிடம்'' என்றான்." அவன் அங்கே மேலே சென்று ஜெபித்தான், தேவன் அவனுக்கு ஒரு சாட்சியை அளித்தார். அவர்,''இப்பொழுது நீ கீழே சென்று ராஜாவை நோக்கி நான்...நீ அதை வரவழைக்கும் வரை ஒரு பனித் துளியும் கீழே விழப்போவதில்லை என்று

கூறு'' என்று கூறினார். அவன் கீழே சென்று அதை ராஜாவிடம் கூறுகிறான். பிறகு அங்கே மேலே சென்று உட்கார்ந்துக் கொண்டான். அவன் ஆகவே அங்கே ... உங்களால் கற்பனை செய்ய முடிகின்றதா? ''அந்த கிழவனுக்கு மூளை குழம்பி விட்டது. பாருங்கள்? என்ன, தான் அதை வரவழைக்கும் வரை மழை பெய்யாது என்று அவன் கூறுகிறானே'' என்று சில ஜனங்கள் கூறினதை என்னால் கேட்க முடிகின்றது. ஆனால் அவன் தேவ னுடைய சாட்சியாக இருந்தான். தான் எதைக் குறித்து பேசிக் கொண்டிருக் கின்றான் என்பதை அறிந்த வனாக அவன் இருந்தான். தேவன் என்ன செய்வார் என்பதை அவன் அறிந்தவனாக இருந் தான், ஏனெனில் தேவன் எப்பொழுதுமே தம்முடைய வார்த்தையை காத்துக் கொள்கி றார். எலியா அதை அறிந்திருந்தான். ஆதலால், மழை பெய்யப் போவதில்லை என்று தேவன் அவனிடம் கூறினதை

அவன் அறிந்திருந்தான், ஆகவே அவன் சென்று மழை பெய்யாதிருக்கும் என்று கூறினான்.

60. நீங்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறலாம் என்று தேவன் கூறுவாரானால், போய் அதைப் பெற்றுக் கொள்ளுங்கள். சுகமளிப்பு உனக்குத்தான் என்று தேவன் கூறுகின்றார் என்றால், அப்படியானால் போய் அதைப் பெற்றுக் கொள்ளுங்கள். நீ ஒரு சாட்சியாய் இருந்தால், சென்று கொண்டேயிரு, அவருக்கு சாட்சியாய் இரு. தேவன் அதை வாக்குத்தத்தம் செய்திருக்கிறார், அவரால் பொய்யுரைக்க முடியாது. அவர்கள், ''அற்புதங்களின் நாட்கள் கடந்து விட்டன" என்று கூறினாலும் பரவாயில்லை, அதை அப்படியே விட்டு விடுங்கள். நாம் எடுப்பது தேவனுடைய வார்த்தையாகும், யாரோ ஒருவருடையது அல்ல.

61. முதலாவதாக உங்களுக்குத் தெரியுமா, இதோ. வயதான எலியா வருகிறான், அங்கே மேலே செல்வதை என்னால் காண முடிகிறது. ஆகவே அவன், ''இப்பொழுது அந்த வயதான பைத்தியக் காரனைப் பாருங்கள்! அங்கே இருக்கின்ற அந்த மலையின்மேல் சென்று, அந்த கேரீத் ஆற்றண்டையில் அமர்ந்து கொண்டான். என்ன அங்கே மேலே இருக்கின்ற கிழவன் நீண்ட நரைத்த தாடி. அவனுக்கு எழுபத்தைந்து வயது இருக்கும், கையில் ஒரு தடியை வைத்திருக்கிறான். ஒரு சிறிய கலசத்தில் எண்ணெய், என்ன, அங்கே மேலே பட்டினியால் இறந்துவிடுவான் என்ன என்றான். ஆனால், சிறிது கழித்து, அந்த பஞ்சம் வந்தது, அது பரவத் துவங்கினது. ஆகவே "உங்களுக்குத் தெரியுமா, அவனைப் பயித்தியக்காரன் என்று நினைத்திருந்த அங்கே கீழே இருந்த அந்த ஜனங்கள் அவன் ஒரு நாளில் மூன்று வேளை

ஆகாரம் சாப்பிட்ட ஒரு நல்ல பொழுதை உடையவனாக இருந்தான் என்பதை கவனிக்க நேர்ந்தது. ஆம். இன்றிரவு இங்கே இருக்கின்ற அநேக ஜனங்களைக் காட்டிலும் அவன் நல்ல நிலைமையில் இருந்தான். அவன் சில சுமை சுமக்கும் வேலையாட்களைக் கொண்டிருந்தான். அந்த சுமையாட்கள், அது சரி, காகங்கள் ஒவ்வொரு நாளும் வந்து, அவனுக்கு இறைச்சிக் கலவை வைக்கப்பட்டிருந்த இரு ரொட்டிகளால் ஆன பலகாரத்தை, அவனுடைய காலை உண வாகக் கொண்டு வந்து கொடுத்தன.

62. சில சமயத்திற்கு முன்னர் யாரோ ஒரு ஆள் பிரசங்கியே, நீர் அதை விசுவாசிக்கிறீர் என்று கூற விழைகிறீரா?'' என்று கேட் டான். . நான், ''ஆம், ஐயா."' என்றேன். அவன், ''அவன் சாப்பிட்டான் என்று நீர் விசுவாசிக்கிறீர் என்று எனக்கு கூற முற்படுகிறீரா? " என்றான். நான், "ஆமாம், அவன் சாப்பிட்டான்" என்றேன்.

'' எப்படி நீர்... அவனுக்கு எங்கிருந்து மீன் கிடைத்தது?'' நான்,“ எனக்குத் தெரியாது.” என்றேன். ''அவனுக்கு எங்கிருந்து அப்பம் கிடைத்தது“ நான், “ எனக்குத் தெரியாது” என்றேன். அவன், ''அவன் ஒரு ரொட்டி கடைக்கு சென்றிருப்பான் என்று நீர் நினைக்கின்றீரா? “ என்றான். நான், ''உனக்கு என்னால் கூறமுடியாது. ஆனால், எனக்கு தெரிந்த ஒரேயொரு காரியம், காகங்கள் அதைக் கொண்டு வந்தன. அவன் அதைச் சாப்பிட்டு, அதற்கு நன்றியுள்ளவனாக இருந்து, தேவன் தன்னிடம் என்ன செய்ய வேண்டும் என்று கூறினாரோ அதைச் செய்தான். என்றேன்.

63. பரிசுத்த ஆவியின் அபிஷேகமும் அதே விதமாகத்தான். நீங்கள், ''அந்த ஜனங்களை சத்தமிடச் செய்வது என்ன?' எனலாம். எனக்கு தெரியாது. ''நீர் என்ன கூற முற்படுகிறீர்?''அது பரலோகத்தை விட்டு, தேவனிடமிருந்து வருகின்ற மன்னா. ''உண்மையாகவே ஏதோ ஒன்றை

நீங்கள் உணர்கிறீர்கள் என்கிறீர்களா? நான் அதை நம்புவதில்லை'' நல்லது, நீ செய்யத் தேவையில்லை. பரிசுத்த ஆவியானவர் அதைக் கொண்டு வருகிறார். நான் அதை அப்படியே புசித்து, திருப்தியாகி, பிறகு சத்தமிட்டு ஒரு நல்ல சமயத்தை உடையவனாக இருக்கிறேன். உலகமானது சென்று தாங்கள் எதை நம்ப வேண்டும் என்று விரும்புகின்றனரோ அதையே செய்யட்டும். அந்த பரிசுத்த ஆவி!'' ஆனால் எங்கிருந்து அவர் அதை பெறுகின்றார்? எங்கிருந்து மன்னா வருகின்றது? நீங்கள் காணமுடியாத, காற்றிலிருந்து ஏதாவதொன்று எங்கிருந்து வரும்?'' எனக்குத் தெரியாது, ஆனால் அது இங்கே வருகின்றது. ஆமென். அதற்கு நீங்கள் சாட்சிகளாயிருக்கிறீர்களா? (சபையார், ''ஆமென்' என்கின்றனர் - ஆசி). கர்த்தர் நல்லவர் என்பதை நீங்கள் ருசித்துப் பார்த்திருக்கிறீர்களா? ('ஆமென்") எதைக் குறித்து பேசுகிறீர்கள்

என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? ('ஆமென் ) இன்றிரவு உங்கள் உயிரைப் போல இரட்சிப்பிற்கென தேவனுடைய வல்லமையான அந்த பரிசுத்த ஆவியின் அபிஷேகம் உண்மையானதாய் இருக்கிறது. நிச்சயமாக, அது அருமையானது.

64. அவன் அங்கே உட்கார்ந்து சாப்பிட்டான். அவன் குடிக்க ஆயத்தமானபோது, அவன் அந்த ஆற்றண்டை வந்து பருகினான், அவ்வளவுதான். அவன் பயித்தியக்காரன் என்று அவர்கள் நினைத்தனர். இல்லை. அவன் தேவனுடைய சாட்சியாக இருந்தான். அது சரி. ஆகவே முதலாவதாக என்ன என்று உங்களுக்குத் தெரியுமா, அந்த ஆறு வற்றிப்போன பிறகு, அவர்,''இப்பொழுது உன்னை கவனித்துக் கொள்ளும்படிக்கு ஒரு விதவையை நான் ஆயத்தம் செய்திருக்கிறேன்'' என்று கூறினார். என்னே, ஒரு பிரசங்கி செல்லத்தக்கதாக எப்பேற்பட்ட ஒருஇடம், ஒருவிதவையின் வீட்டிற்கும்

ஆனால் தேவன் ''நான் - நான் அதை ஆயத்தம் பண்ணி னேன்'' என்றார். ஆதலால் அவன் அங்கே செல்கிறான். அங்கேகீழே, அவன் ஒரு சாட்சியாக இருக்க வேண்டும். ஆகவே இந்த விதவை ... ஆகவே அவன் அங்கே செல்கிறான், அங்கே தெருவில் நடந்து கொண்டே செல்கின்றான். தரிசனத்தின்படி, அந்த முற்றத்தில் ஒரு ஸ்திரீயை அவன் காண வேண்டியவனாக இருந்தான், அவ்வாறு தான் என்று எண்ணுகிறேன். அந்த முற்றத்தில் ஒரு ஸ்திரீயைக் கண்டான், அவன் அது அவள்தான். ஆகவே நான் மெதுவாக கூட நடப்பேன்" என்றான். அவன், நீ சென்று, நான் குடிக்கிறதற்கு கொஞ்சம் தண்ணீரும் பிறகு ஒரு - ஒரு கொஞ்சம் அப்பமும், அல்லது - அல்லது ஒரு அடையைக் கொண்டு வா,'' கூறப்போனால்," உன் கையிலே கொண்டு வா'' என்றான். அவள், ''உம்முடைய ஆத்துமா மரிக்காமல் இருக்கிறது போல,

கர்த்தரின் ஜீவனைக் கொண்டு'' என்றாள். ''ஒருசிறிய அடையைச் செய்யும் அளவிற்கு பானையில் மாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெய் மாத்திரமே நான் வைத்திருக்கிறேன். ஆகவே நான் இங்கே வெளியே சுடப்போகிறேன்... இரண்டு விறகு பொறுக்குகிறேன். இதோ எனக்கும் என் குமாரனுக்கும் அடையை செய்யப் போகிறேன். ஆகவே அதை சாப்பிட்ட பிறகு, நாங்கள் செத்துப் போவோம்'' என்றாள். அவன், “போய் முதலில் எனக்கு ஒரு அடையைக் கொண்டு வா” என்றான். ஆமென்.

65. ''முதலாவது தேவனுடைய இராஜ் ஜியத்தைத் தேடுங்கள்.'' அது உண்மை என்று நீங்கள் கண்டிருக்கிறீர்களா? தேவனை முதலில் வையுங்கள். முதலில் உங்கள் தசமபாகங்களைச் செலுத்துங்கள். முதலாவதாக எல்லா காரியத்தையும் செலுத்துங்கள். தேவனுக்கு செலுத்துங்கள். காலையில் முதலில் ஜெபம் செய்யுங்கள்.

நாள் முழுவதும் ஜெபியுங்கள். ஒவ்வொரு காரியத்திலும் தேவனுக்கு முதல் இடம் கொடுங்கள். நீங்கள் ஒரு சாட்சியாய் இருப்பீர்கள். அவள் நேராக உள்ளே ஓடுகிறாள். இரண்டு விறகுகளை அவள் வைத்திருந்தாள். அக்காலத்து வழக்கம் என்னவெனில், அவர்கள் இரண்டு விறகுகளை உபயோகித்தனர். இவ்வித மாக குறுக்காக அந்த இரண்டு விறகுகள் இருக்கும், அதன் நடுவில் நெருப்பு இருக்கும். இந்தியர்கள் இன்னும் அவ் விதம் செய்கின்றனர், அவை எரியும் போது கட்டைகளை உள்ளே நகர்த்திக் கொண்டேயிருப்பர். அது தான் சிலுவை, கிறிஸ்து, மத்தியில் நெருப்பு இருக்கும் இடம். அவர்கள் அந்த சிறிய போஜன பலியில் எடுத்து, பிசையப்பட்ட பலி, ''இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாத வராயிருக்கிறார்' என்ற முற்றிலும் அதேவிதமாக பிசையப்பட்டது. பரிசுத்த ஆவியாகிய எண்ணெயை

அதனுள் ஊற்றி அதைக் கலத்தல். பரிசுத்த ஆவி, கிறிஸ்து; இப்பொழுது ஒருவித மான அப்பம் செய்யப்படுதல். சகோ தரனே! ஆமென். ஓ, நான் பயித்தியக்காரன் என்று நினைக்காதீர்கள். நான் இன்றிரவு பக்திப் பரவசமாக மாத்திரமே உள்ளேன். அதுசரி. கவனியுங்கள், "முதலில் எனக்கு ஒரு சிறிய அடையை பண்ணிக்கொண்டு வா"

66. ஆதலால் அவன் கிறிஸ்துவாகிய போஜன பலியை எடுத்து, பரிசுத்த ஆவியை அதற்குள் ஊற்றி, அதைக் கலந்து, சிலுவையின் மீது வைத்து அதை சமைத்தான். ஓ, சகோதரனே, அப்பத்தைக் குறித்துப் பேசுவது, அது அவைகளில் ஒன்றாக இருந்தது! அவள் அந்த சிறிய அடையையும் அவள் வைத்திருந்த கடைசிச் சொட்டு தண்ணீரையும் எடுத்துக் கொண்டு அவள் வெளியே வந்தாள். ஆகவே அந்தத் தீர்க்கதரிசி அங்கே நின்றுக் கொண்டு அதைப் புசித்து, தண்ணீரைக்

குடித்தான். இப்பொழுது நீ திரும்பிச் சென்று உனக்கு ஒன்றும் உன் குமாரனுக்கு ஒன்றும் பண்ணு. ஏனெனில், கர்த்தர் உரைக்கிறதாவது தேவன் பூமியின் மேல் மழையைக் கட்டளையிடும் நாள் மட்டும் பானை வெறுமையாவதில்லை, கலசம் உலர்ந்து போவதில்லை'' என்றான். என்ன? ஒரு சாட்சி. அது சரி. அந்த விதவை அந்த தேசத்திலே ஒரு சாட்சியாக இருந்தாள்.



அவன் உறுதிப்படுத்தப்பட்ட, நிரூபிக்கப்பட்ட தீர்க்கதரிசியாக இருந்தான். ஆகவே மக்கள் மனந்திரும்பியிருக்க வேண்டும். அதற்குப் பதிலாக அவர்கள் அவனை நோக்கி நகைத்தார்கள்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## 1 இராஜாக்கள் 17:1

கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியனாகிய
எலியா ஆகாபை நோக்கி: என்
வாக்கின்படியே அன்றி இந்த
வருஷங்களிலே பனியும் மழையும்
பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின்
தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற
நான் அவருடைய ஜீவனைக்கொண்டு
சொல்லுகிறேன் என்றான்.

---

## யாக்கோபு 5:17-18

17. எலியா என்பவன் நம்மைப்போலப்
பாடுள்ள மனுஷனாயிருந்தும்,
மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய்
ஜெபம்பண்ணினான். அப்பொழுது
மூன்றுவருஷமும் ஆறுமாதமும்
பூமியின்மேல் மழை பெய்யவில்லை.

18. மறுபடியும் ஜெபம்பண்ணினான்,
அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது,
பூமி தன் பலனைத் தந்தது.

இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசி யாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

## செய்தி: 65-0718E ஏற்ற காலத்தின் ஆவிக்குரிய ஆகாரம்

30. அவர்கள் அவனைப் பார்த்து நகைத்தனர். அவன் வெறிபிடித்தவன் என்று நினைத்தனர். "அந்த மத வெறியன்"

ஆனால் பாருங்கள். மழை பெய்யாமல் போகும். கர்த்தர் உரைக்கிறதாவது என்ற செய்தியை உடையவனாய் அவன் இருந்தான்.

அதற்கு முன்பாக தேவன் தம்முடைய ஊழியக்காரனான எலியாவுக்கு அதை வெளிப்படுத்தினார்.

அவன் உறுதிப்படுத்தப்பட்ட, நிரூபிக் கப்பட்ட தீர்க்கதரிசியாக இருந்தான்.


ஆகவே மக்கள் மனந்திரும்பியிருக்க வேண்டும். அதற்குப் பதிலாக அவர்கள் அவனை நோக்கி நகைத்தார்கள்.

" ஓ ஏராளமான மழையைப் பெற்றோம் நீர்த்தேக்கங்கள் எல்லாம் நிறைந்திருக் கின்றன. ஆறுகளிலும் தண்ணீர் நன்றாக ஓடுகிறது" என்றார்கள்.

வேதம் சொல்லுகிறது. "மூன்று வருஷ மும் ஆறு மாதமும் அங்கே பனி கூட பெய்யவில்லை ".

எல்லா இடத்திலும், எல்லா ஓடை களும் நீர் நிலைகளும் காய்ந்து விட்டன அந்த மனிதனல்ல, தேவன் அந்த மனிதன் மூலம் பேசினார். அது அப்படித் தான் இருந்தது. நாம் அதை எப்போதும் அறி வோம். ஆகவே அவன்.....

# அவனிடம் வானத்தின் திறவுகோல் இருந்தது. அதை அவன் பூட்டவும் மூடியும், திறக்கவும் முடியும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## 1 இராஜாக்கள் 17:1

**கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியனாகிய எலியா ஆகாபை நோக்கி: என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்.**

---

## யாக்கோபு 5:17-18

**17. எலியா என்பவன் நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான். அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை.**

**18. மறுபடியும் ஜெபம்பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது.**

**இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசி யாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:**

---

# செய்தி: 60-0310 எலியாவும் போஜனபலியும்

---

19. தேசம் நாளடைவில் செழிப்படைந்தது. செழிப்பு தேவன் அவர்களோடுகூட இருக்கிறார் என்பதற்கு அடையாளம் என்று அவர்கள் எண்ணினர். அது முற்றிலும் உண்மையல்ல. தேவன் உங்களிடம் வருகிறார். ஒரு பழமொழி உண்டு - "தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்பவர்க்கு தேவன் உதவி செய்கிறார்" என்னும் தேவனைக் கனவீனப்படுத்தும் பழமொழி. அது தேவனைக் கனவீனப் படுத்துவதாகும். தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்ள முடியாதவர் களுக்கே தேவன் உதவி செய்கிறார்.

இரக்கம் தேவைப்படுகிறவர்களுக்கு அவர் தேவனாயிருக்கிறார். அவர் இரக்கமுள்ள தேவன். அந்த பழமொழி அவ்வாறு கூறுகின்றதே, உங்களுக்கு நீங்களே உதவி செய்துகொள்ள முடியுமானால், உங்களுக்கு தேவனுடைய உதவி அவசியமில்லையே! தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்ள முடியாதவர்களுக்கு அவர் உதவி செய்கிறார்.

20. அவர்கள் நன்றாக உணவு அருந்தி, நன்றாக உடை உடுத்தினால், எல்லாமே சரியாகத்தான் இருக்க வேண்டுமென்று தேசம் எண்ணியிருந்தது. ஆனால் அங்கு ஒருவன் இன்னும் பழமை நாகரீகமுடன் வாழ்ந்து வந்தான். பழமை நாகரீகம் கொண்ட தேவன் ஒருவர் இருக்கிறார் என்றும், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் தேவனாகிய அவர் பரிசுத்தமுள்ளவர் என்றும், தமது பரிசுத்தத்துக்கு முற்றிலும் அர்ப்பணிப்பை அவர் எதிர்பார்க்கிறார் என்றும் அவன் விசுவாசித்தான், ஆனால்

யேசபேலும் அவளுடைய நவீன கருத்துக்கள் கொண்ட குழுவும் அவனை வெறுத்தனர், அவன் அவர்களுடைய போதகன், ஆனால் அவர்கள் அதை விசுவாசிக்கவில்லை. எனவே தனது ஜீவனைக் காத்துக்கொள்ள அவன் ஒளிந்துகொள்ள வேண்டியதாயிருந்தது.

21. தேவன் அவனை மலையின் மேல் அனுப்பினார். அவர் அவனுக்கு ஒரு செய்தியைக் கொடுத்து, ''நீ போய் அந்த பொல்லாத ராஜாவிடம், நீ கட்டளையிட்டாலன்றி தேசத்தில் மழையும் பெய்யாது, பனியும் பெய்யாது என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல்" என்றார். சமயம் வரும்போது மழையை வருவிக்க எலியாவின் வாயில் அதை போட்டார். அவனிடம் வானத்தின் திறவுகோல் இருந்தது. அதை அவன் பூட்டவும் மூடியும், திறக்கவும் முடியும். அவர் அவனிடம்,"நீ இந்த குழப்பத்தை விட்டு புறப்பட்டு வனாந்தரத்துக்கு செல்ல

வேண்டும். அவர்களை விட்டு வெளியே வா. அவர்களிடம் நீ பிரசங்கம் செய்தாய். ஆனால் அவர்கள் உனக்கு செவிகொடுக்க மாட்டார்கள், அவர்கள் நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே போகின்றனர். நீ வனாந்தரத்துக்கு சென்று கேரீத் ஆற்றண்டையில் உட்கார்ந்து கொண்டிரு. உன்னைப் போஷிக்க நான் காகங்களுக்கு ஏற்கனவே கட்டளையிட்டு விட்டேன்'' என்றார். ஓ, ஜனங்கள் செய்யாவிட்டால் அதைச் செய்ய தேவனுக்கு காகங்கள் உள்ளன!

22. ''தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டு பண்ண வல்லவராயிருக்கிறார்'' என்று யோவான் ஸ்நானன் கூறினான். இயேசு," இவர்கள் பேசமாலிருந்தால் கல்லுகளே கூப்பிடும்" என்றார். தேவன் தாம் விரும்பு வதைச் செய்ய முடியும். அவர் ''நான் காகங்களுக்கு கட்டளையிட்டிருக்கிறேன். அவைகள் உன்னைப் போஷிக்கும்''

என்றார். காகங்கள் அவனுக்கு இறைச்சியும் அப்பமும் கொண்டு வந்தன. ஒருமுறை ஒருவன் என்னிடம், "சகோ. பிரன்ஹாமே காகங்களுக்கு இறைச்சியும் அப்பமும் எங்கிருந்து கிடைத்தன?" என்று கேட்டார். நான், "எனக்குத் தெரியாது, அவை கொண்டு வந்தன என்று மாத்திரம் தெரியும். இயேசு ஐந்து அப்பமும் இரண்டு மீன்களையும் எடுத்து ஐயாயிரம் பேர்களைப் போஷித்தாரே. அதே இடத்திலிருந்து தான் இந்த காகங்களும் அதை பெற்றிருக்க வேண்டும். சர்வவல்லமையுள்ள தேவனின் அதே சிருஷ்டிப்பின் கரத்திலிருந்து அவை வந்திருக்க வேண்டும்" என்று விடையளித்தேன். காகங்கள் இறைச்சியும் அப்பமும் கொண்டு வந்து எலியாவிடம் கொடுத்தன. அவன் அதை புசித்து விட்டு குனிந்து அந்த ஊற்றின் தண்ணீரைக் குடித்தான். தேவன் தம்முடைய தீர்க்கதரிசியை இளைப்பாறப் பண்ணினார்.

23. ஓ, தப்பிப்பதற்கு தேவன் ஒரு வழியை வைத்திருக்கிறார் என்பதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. அவன் பைத்தியக்காரன் என்று அவர்கள் எண்ணி யிருந்தனர். "அந்த வயோதிப தீர்க்கதரிசி மகிழ்ச்சியை குலைத்து போடுபவன்" என்று அவனை இகழ்ந்தனர். தங்கள் சிறு மகிழ்ச்சி விருந்துகளில் கிடைக்கும் மகிழ்ச்சியை அவன் குலைத்துப் போடப் பார்க்கிறான். அது பாவம் என்று எப்பொழுதும் கூறுகிறான் என்று அவர்கள் நினைத்தனர். அவன் தேவனுடைய கட்டளையைக் கைக்கொண்டு மலையின் மேல் சென்று, தேசத்திலேயே மிகவும் வறட்சியான, உயரமான இடத்தில் உட்கார்ந்தான். ஆனால் தேவனோ ஆற்றில் தண்ணீர் ஓடும்படி செய்தார். ஆனால் கீழே ஜனங்கள் நாவரண்டு, தண்ணீருக்காக தவித்துக் கொண்டிருந்தனர்.

# காகங்கள் அவன் பக்கத்தில் வந்து, அவனுக்கு பரிமாறின




சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

## *செய்தி:* தேவனால் அருளப்பட்ட பாதை, டிசம்பர் 1, 1953

173. ஒருசமயம் எலியா என்ற பெயருடைய ஒரு மனிதன் இருந்தான். கர்த்தர் அவனிடம், "நான் இந்த தேசத்தின்மேல் நியாயத்தீர்ப்பை அனுப்பப் போகும் அளவுக்கு, இந்த தேசம் மிகவும் பாவமுள்ளதாயிருக்கிறது. ஆனால் எலியாவே, நான் உனக்காக தப்பிக்கொள்ளும்படியான ஒரு வழியை ஏற்படுத்தப் போகிறேன்" என்றார்.

174. "கர்த்தாவே நீர் என்ன செய்யப் போகிறீர்?"

175. "நீ அங்கே மேலே போய், அதோ அங்கே அந்த மலையின் உச்சியிலுள்ள, கேரீத் என்ற சிறு குளத்தண்டையில் இரு."

176. எலியா வீதியினூடாக நடந்து சென்று, "நல்லது, இப்பொழுது, நான் மழைக்காக அழைப்பது வரையில், மழை பெய்யப் போவதில்லை. நான் அதோ அங்கே மேலே போய், அந்த மலையின் மேல் இருக்கப் (போகிறேன்)" என்றான்.

177. மழையில்லாமல் (வறட்சி) ஏற்பட்டபோது, அந்த ஜனங்கள் வீட்டிற்கு வந்து, "அங்கே மேலே தண்ணீர் இல்லாதிருக்கும் போது, அங்கே மேலே அந்த மலையின் உச்சியிலிருக்கிற அந்தச் சிறு பழைய நீரூற்றண்டையில் உட்கார்ந்து கொண்டிருக்கிற அந்தப் பைத்தியக்கார பித்து கொள்ளி கிழவனைப் பாருங்கள்" என்று கூறிக்கொண்டிருப்பதை உங்களால் கற்பனை செய்துபார்க்க முடிகிறதா. ஆனால் தேவனோ அதைத் தொடர்ந்து பணியில் ஈடுபடுத்திக்கொண்டிருந்தார் (kept it running). அவர் அவ்வாறு செய்வதற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஆமாம், அவன் மேலே மலையின் உச்சியில் இருந்தான். "அந்தக் கிழவன் அங்கு மேலேயே காய்ந்து போய்விடுவான் என்று பந்தயம் கட்டுகிறேன்" என்றார்கள்.

178. இல்லை, இல்லை, இல்லை, அவன் அப்படியே... செய்து கொண்டிருந்தான். அவன் தேவனால் அருளப்பட்ட வழியை எடுத்துக்கொண்டான். தேவன், "நீ அங்கே மேலே போய், இரு, ஏனென்றால் உன்னைப் போஷிக்க நான் ஏற்கனவே காகங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறேன்" என்றார்.

179. அவர்கள், "அந்தப் பரிதாபமான கிழட்டு பித்து கொள்ளி அங்கே மேலே இருந்து பட்டினி கிடந்து செத்து விடுவான்" என்று கூறினார்கள்.

180. நல்லது, அவனோ மிக நல்ல நிலையில் இருந்து கொண்டிருந்தான். இன்றிரவு இங்கேயிருக்கும் உங்களில் நிறைய பேர் - ஏராளமானோரைக் காட்டிலும் அவன் மிக நல்ல நிலையில் இருந்தான் என்று நான் பந்தயம் கட்டுகிறேன். அவனுக்கு சேவை செய்ய, அவனுக்குச் சில கறுப்பின வேலைக்காரர்கள் இருந்தார்கள். உங்களுக்கு அது இல்லை என்று நான் பந்தயம் கட்டுகிறேன். ஆம், ஐயா. காகங்கள் அவன் பக்கத்தில் வந்து, அவனுக்கு பரிமாறின. அது சரிதானா? அது சரியே. அவனுக்கு கறுப்பின சுமை தூக்குபவர்கள் இருந்தார்கள், உங்களில் பாதிபேருக்கு அது இல்லை. அவைகள், அந்தக் காகங்கள் அருகில் வந்து, அவனுக்குப் பணி புரிந்துவிட்டு, அவைகள் கடந்து சென்றன.

181. சமீபத்தில் ஏதோவொரு பிரசங்கியார், "பில்லி, அந்தக் காகங்கள் அந்த மனிதனுக்கு ஆகாரத்தைக் கொண்டு வந்தது என்று நீர் நம்புவதாகவா என்னிடம் சொல்ல வருகிறீர்?" என்று கேட்டார்.

182. அதற்கு நான், “அவ்வாறு தான் வேதாகமம் கூறுகிறது. நான் அதை விசுவாசிக்கிறேன்” என்றேன். ஆமாம்.

183. “நான் உம்மிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்க விரும்புகிறேன். இந்த உலகத்திலே அந்தக் காகங்களுக்கு எப்படி சான்ட்விச்சுகள் கிடைத்து, அதை எலியாவிடம் கொண்டு வந்தன?” என்று கேட்டார்.

184. நான், “எனக்குத் தெரியாது. ஒரே காரியம் என்னவென்றால்: காகங்களுக்கு அது கிடைத்து, அவை அதைக் கொண்டு வந்தன; எலியா அதைப் பெற்றுக்கொண்டான்; அதோடு அது முடிவுபெறுகிறது. இப்பொழுது சரியாக இதைப்போன்று, எது என்னை இவ்விதம் நடந்து கொள்ளச் செய்கிறது என்று என்னால் உம்மிடம் கூற முடியாது, எனக்குத் தெரிந்த ஒரே காரியம் என்னவென்றால்: தேவன் அதைப் போதித்திருக்கிறார்; வேதாகமம் அவ்வாறு கூறுகிறது; பரிசுத்த ஆவியானவர் அதைக் கொண்டு வந்தார்; நான் அதைப் பெற்றுக்கொண்டேன்; நான் அப்படியே ஒரு நல்ல நேரத்தை உடையவனாயிருக்கிறேன்” என்றேன்.

185. அது எப்படி வருகிறது என்று எனக்குத் தெரியாது. நான் அப்படியே... அது அப்படியே இங்கேயிருக்கிறது. அல்லேலூயா! எனக்குத் தெரியாது. தேவன் அவ்வாறு கூறியுள்ளார், எனவே நான் அப்படியே - நான் அப்படியே அதைப் புசிக்கிறேன். பரிசுத்த ஆவியானவர் அதைக் கொண்டு வருகிறார், நான், “ஆம், கர்த்தாவே” என்று கூறுகிறேன்.

186. “நல்லது, அவர்கள் உம்மை ஒரு பரிசுத்த உருளை என்று அழைக்கப் போகிறார்கள்.”

187. “எனக்குக் கவலையில்லை, ஆண்டவரே. நான் அப்படியே அதை நேசிக்கிறேன். அது அப்படியே நன்றாக உள்ளது. நான் அப்படியே தொடர்ந்து புசித்துக்கொண்டே இருக்கிறேன். அதைக் கீழே அனுப்பும்.” ஆமென். “அந்த இறைச்சி இடையீட்டு அப்பத்தில் (sandwich) ஒரு பெரிய கடியை எனக்குக் கொடும்.” அவ்வளவு தான்.

188. அவர்கள், “ஒ, என்னே, ... கண்டுபிடிக்க முயற்சிக்கும்படியாக, அங்கே சுற்றிலும் வலைவீசித் தேடிக்கொண்டிருக்கிறோமே” என்று கூறுவதை என்னால் கேட்க முடிகிறது.

189. அந்த வயதான பிரசங்கியோ அங்கே மேலே உட்கார்ந்து கொண்டிருந்தான், மத வெறியன் என்று கருதப்பட்ட அவன், ஒரு காரியத்தையும் குறித்து கவலைப்படாதவனாக உட்கார்ந்திருந்தான். பாருங்கள்? அவன் நாள் முழுவதும் அங்கே உட்கார்ந்திருந்து, "ஓ கர்த்தாவே, நான் உம்மை நேசிக்கிறேன். கர்த்தருக்கு துதி உண்டாவதாக. தேவனே, நான் உம்மைத் துதிக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

190. காகமானது அருகில் வந்து, "எலியாவே, இங்கே இருக்கிறாயா" என்றது.


191. அவன் இந்த மகத்தான பெரிய இறைச்சி இடையீட்டு அப்பத்தை (சான்விச்) எடுத்துக்கொண்டு, "ஓ, என்னே" என்றான். அங்கே கீழே அந்த பேர்வழிகளோ தங்கள் பேச்சினாலே கோபத்தால் பல்லைக் கடித்துக் கொண்டிருந்தார்கள்... இவனோ அப்படியே சிற்றாற்றில் இறங்கி, அவனுக்கு எவ்வளவு தண்ணீர் வேண்டுமோ அதைக் குடித்தான், இருப்பினும் அவன், "பைத்தியக்காரன் (crazy)" என்று அழைக்கப்பட்டான்.


192. அது அந்தவிதமாகத்தான் இருக்கிறது, சகோதரனே. நாம் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்கிற காரணத்தினால், நாம் பைத்தியம் பிடித்தவர்கள் என்று எண்ணிக்கொள்கிறார்கள். சகோதரனே, நாமோ தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக பீறிட்டுப் பாய்கிற, ஒருபோதும் தீர்ந்துபோகாத நித்திய ஜீவத்தண்ணீர்களை உடைய ஒரு நீரூற்றிலிருந்து பருகிக் கொண்டிருக்கிறோம். நிச்சயமாக, அதுவே தேவனால் அருளப்பட்ட வழியாக இருக்கிறது. நிச்சயமாக, அவ்வாறுதான்.


193. உங்கள் சபையில் சேர்ந்து, உங்கள் பிரசங்கியாரோடு கரங்களைக் குலுக்க முயற்சிக்க வேண்டாம். தேவனோடு சரிப்படுத்திக் கொள்ளுங்கள். அல்லேலூயா! அதைச் செய்ய வேண்டிய வழி அதுதான், அதைச் செய்வதற்கு உங்களுக்காக தேவனால் அருளப்பட்ட பாதை அதுதான். நீங்கள் வெறுமனே விசுவாசிப்பீர்களானால், தப்பிக்கொள்ளும்படியாக, ஒவ்வொரு முறையும், அவர் ஒரு வழியை உண்டாக்குவார். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? ஆம், ஐயா. அவர் எலியாவுக்காக தப்பிக்கொள்ளும்படியான ஒரு வழியை உண்டுபண்ணினார்.

★★★★★

(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)





LAJOS
SEGNER



# மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான்

1



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து